ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

சுற்றறிக்கை இலக்கம்: PS/GPA/Circular/35/2020
25.11.2020

அமைச்சுகளின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
மாகாண சுகாதார செயலாளர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**வீடுகளில் தனிமைப்படுத்தப்படுத்தல் கண்காணிப்புப் பொறிமுறை**

தற்போதைய Covid-19 உலகளாவிய தொற்றுநோயைக் கட்டுப்படுவதற்காக, சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப ஆலோசனைகளின் கீழ் அரசாங்கத்தினால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, நோயுடன் தொடர்புடையவர்களுக்கான வீட்டுத் தனிமைப்படுத்தலானது, நோய் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கியமானதொரு நடவடிக்கையாகும். அந்த நோக்கத்தை அடையவதற்காக ஆரம்ப மட்டத்தில் வீடுகளில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் எதிர்பார்க்கப்படும் முறையில் செயலாற்றுகின்றனரா என்பதை உறுதிச் செய்வதற்காக, கள உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்றுக்கு இதன் கண்காணிப்புப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

## கண்காணிப்புக் குழுவின் உள்ளடக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு

கிராமியக் குழுவின் உத்தியோகத்தர்களான கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள், குடும்ப சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்கள் என்பவர்களுக்கு மேலதிகமாக காவல்துறை அதிகாரிகளுக்கு இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ் உத்தியோகத்தர்கள், சுகாதார வைத்திய உத்தியோகத்தர்களின் ஒட்டுமொத்த தொழில்நுட்ப மேற்பார்வையின் கீழ், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் ஒருங்கிணைப்பில் கண்காணிப்புப் பொறிமுறையைச் செயல்படுத்த வேண்டும்.

வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட நபர்கள் 14 நாட்கள் பூராகவும் அச் செயல்பாட்டினைத் தகுந்தமுறையில் நிறைவேற்றுவதைக் கண்காணிக்க வேண்டியதோடு அதற்காக ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் கீழ்வருமாறு கிழமையின் நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

| **நாள்** | **கண்காணிக்கும் உத்தியோகத்தர்** |
|---|---|
| **திங்கட்கிழமை** | பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| **செவ்வாய்க்கிழமை** | காவல்துறை அதிகாரி |



ගාලු මුවදොර, කොළඹ 01
காலி முகத்திடல், கொழும்பு 01
Galle Face, Colombo 01
දුරකථන / தொலைபேசி / Telephones ++ 94 (0) 11 2354418 ++ 94 (0) 11 2473873
ෆැක්ස් / தொலைநகல் / Fax ++ 94 11 2446657
ඊ-තැපෑල / மின்-அஞ்சல் / e-mail prsec@presidentsoffice.lk

| | |
|---|---|
| **புதன்கிழமை** | விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் |
| **வியாழக்கிழமை** | கிராம உத்தியோகத்தர் |
| **வெள்ளிக்கிழமை** | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| **சனிக்கிழமை** | குடும்ப சுகாதார சேவைகள் உத்தியோகத்தர் |
| **ஞாயிற்றுக்கிழமை** | பொதுச் சுகாதாரப் பரிசோதகர் |

அதன்படி, தனிப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படும் 14 நாட்களுக்குள் ஒரு உத்தியோகத்தருக்கு இரண்டு நாட்கள் மாத்திரமே வீடுகளைக் கண்காணிக்கும் தேவை ஏற்படுகின்றது. தனிமைப்படுத்தல் காலப்பகுதிக்குள் அந்த குடும்பத்தின் உறுப்பினரொருவர் நோய்க்குள்ளாகினால், ஏனைய உறுப்பினர்கள் அந்நாளிலிருந்து மேலும் 14 நாட்கள் தனிப்படுத்தலுக்கு உள்ளாகும் நிலை ஏற்படும்.

வீட்டுத் தனிமைப்படுத்தலொன்று ஆரம்பிக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அப் பிரதேசத்துக்குரிய பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் உரிய கிராம உத்தியோகத்தருக்கு உடனடியாக அறிவிக்க வேண்டியதோடு தனிமைப்படுத்தல் ஆரம்பிக்கப்படும் நாளைப் பொறுத்து அடுத்த நாளில் கண்காணிக்கும் பொறுப்புள்ள உத்தியோகத்தருக்கும் அறிவித்தல் வேண்டும். தனிமைப்படுத்தல் காலப்பகுதிக்குள் கடமையாற்ற வேண்டிய ஏனைய உத்தியோகத்தர்களுக்கு அறிவித்தல் வழங்குவது கிராம உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## கண்காணிப்புப் பணிகள்

கண்காணிப்புக் குழுவின் உத்தியோகத்தர்கள் தமக்குரிய நாளில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகும் வீடுகளுக்குச் சென்று குறித்த வீட்டில் உள்ளவர்கள் வீட்டினுள் உள்ளமையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அத்தோடு எந்தவொரு தரப்பினரிடமிருந்து வரும் முறைப்பாடுகள் இருப்பின் அவற்றை விசாரித்துப் பார்க்கவேண்டும். கண்காணிப்புக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தைப் பயன்படுத்த வேண்டியதோடு ஒவ்வொரு உத்தியோகத்தரும் தனித்தனியாக ஒரு வீட்டிற்காக ஒரு படிவத்தைப் பயன்படுத்த வேண்டும். காவல்துறை அதிகாரிகளினால் ஏற்கனவே தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் கண்காணிப்புப் பணிகளுக்கு மேலதிகமாக இதனை மேற்கொள்ள வேண்டும். சகல உத்தியோகத்தர்களும் நோயாளிகளினதும் தொடர்புடையவர்களினதும் தனித்துவத்தையும் மற்றும் இரகசியத்தன்மையையும் பாதுகாக்கும் வகையில் பணியாற்ற கடமைப்பட்டுள்ளனர்.

## ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள்

உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் 21/2020 சுற்றறிக்கையின் பிரகாரம் இச் செயல்பாட்டானது பிரதேச குழுவினால் மேற்பார்வை செய்யப்பட வேண்டியதோடு மாவட்டக் குழுவினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட வேண்டும். அதேபோன்று கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்குத் தேவையான வசதிகளை அச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு பெற்றுக்கொள்ள வேண்டும். கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் சகல நோய்தடுப்புப் பாதுகாப்பு விதிமுறைகளை அதாவது இடைவெளி பேணுதல், கைகளைச் சுத்திகரித்தல் மற்றும் முகக்கவசம் அணிதல் போன்றவற்றைக் கடுமையாகப் பின்பற்ற வேண்டும். அதேபோன்று பிரதேச

செயலாளர்கள் அடிக்கடி இவ்விடங்களில் தனிமைப்படுத்தல் செயல்பாடுகள் முறையாக நடைபெறுகிறதா, தனிமைப்படுத்தப்பட்ட நபர்களுக்கான உணவு மற்றும் சுகாதார வசதிகள் பெற்றுக்கொள்ள கூடியமை, வீடுகளின் சுத்தம் மற்றும் ஏனைய நோயாளர்கள், முதியோர், ஊனமுற்றோர் உள்ளார்களா என்பவை தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இச் சுற்றறிக்கை உரிய அமைச்சுக்களுடன் கலந்தாலோசித்த பின்னர் வெளியிடப்படுவதோடு வீடுகளில் தனிமைப்படுத்தப்படுதலைக் கண்காணிப்பு செய்தல் ஒரு சிறப்புமிக்க தேசிய தேவைப்பாடு என்பதால் இதற்கு உரியவாறு அடிமட்டத்திலிருந்து செயற்படுகின்றதென்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பானது உரிய அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனத் தலைவர்கள் மற்றும் வலய மற்றும் பிரிவுகளுக்குப் பொறுப்பான கண்காணிப்பு உத்தியோகத்தர்களின் விசேட கடமையாகும் என்பதைக் கவனத்தில் கொள்ளுமாறும், நேரடிக் கண்காணிப்புக்களை அடிக்கடி மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அதிமேதகு சனாதிபதி அவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளார்.

**ஒப்பம்.:.**
**பி. பீ. ஜயசுந்தர**
சனாதிபதியின் செயலாளர்

**பிரதிகள்:**

1 சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்
2 மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
3 பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
4 சுகாதர வைத்திய உத்தியோகத்தர்கள்

Serial No: | | | | | | |

# வீடுகளில் தனிமைப்படுத்தப்படுதல் கண்காணிப்பு

உத்தியோகத்தரின் பெயர்:.................................................................................................................. பதவி:..................................

வீட்டு முகவரி : ........................................................................................................................................................................

கண்காணிப்புக்குரிய திகதி :

| திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெளளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

வீட்டினுள் தனிமைப்படுத்தப்பட்டவர்களின் பெயர்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

| | கண்காணித்த திகதி | கண்காணித்த நேரம் | தனிமைப்படுத்தலுடன் இணங்குதல் | தனிமைப்படுத்தலை மீறுதல் | வேறு குறிப்புகள் மற்றும் சமர்ப்பிப்புகள் |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |

உத்தியோகத்தரின் பெயர் : ............................

(ஒவ்வொரு உத்தியோத்தராலும், தனிமைப்படுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு படிவம் நிரப்பப்படுதல் வேண்டும்.)